Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 37—No. 5

# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

லர் 37 | குரோதி வைகாசி 1964 மே | இதழ் 5

உள்ளுறை பக்கம்

கற்றூர்களேத்தும் கபாலீச்சரம் ... 127
சென்னை மாநில புது கவர்னர் ... 129
திருவாசகம் — இத்தி ... 130
சிவஞான பாடிய விளக்கம்—இளைஞருக்கு ... 132
சைவ சமயத்தின் இக்கால நிலை ... 137
திருமுறைகளில் இசை நாடகத் தமிழ்ச்சொற்கள் ... 140
கருணை மலை ... 144
வடமொழிச் சிவஞான போதத்தின் காலம் ... 148
திருவான்மியூரில் அந்தர்யோகம் ... 153
சைவ இளைஞர் மாநாட்டுத் தலைமை உரை—அனுபந்தம்

பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,

உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்

**சைவ சித்தாந்த மகா சமாஜம்**

12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை—4.

ண்டுச் சந்தா ரூபா 3 தனிப்பிரதி அணா 4

# சமாஜச் செய்திகள்

31—5—64 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் அலுவலகத்தில் நிகழும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

நம் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சார்பில் முதியோர் தேவார வகுப்பு 13—4—64ல் வணிக வைசிய மண்டபத்தில் அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையர், திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்களால் தொடங்கி வைக்கப் பெற்றது. வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை $8\frac{1}{2}$-10 மணி வரைமுதியோர்களுக்குத்தேவாரப் பயிற்சி அளிக்கப் பெறுகிறது. இளமையில் பயிற்சி பெற வாய்ப்பிழந்த அனைவரும் இவ்வரிய வாய்ப்பினைப் பயன் படுத்தித் தவறாது வந்து படித்துக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓதும் நெறியை மேற்கொள்வது நல்லது.

சமாஜத்தாரால் நடத்தப்பெறும் சைவப் புலவர், இளஞ் சைவப் புலவர் தேர்வுகளின் பாடத்திட்டம் சிறிது கடினமென்று பலராலும் கூறப்பெற்றது. அதனால்பலரும் படித்து நம் சமய சாத்திரங்களில் பயிற்சி பெறவேண்டும் எனநினைத்துப் பாடத்திட்டத்தினைச் சிறிது குறைத்துள்ளோம். குறைத்த பாடத்திட்ட விவரம் ஏப்ரல் இதழில் வெளிவந்துள்ளது.சமாஜஉறுப்பினர்கள் யாவரும்தங்கள் நண்பர்களையும்,குழந்தைகளையும்,பிறரையும் தேர்வில் கலந்து பயன்பெற ஊக்குமாறு வேண்டுகிறோம். இத்தேர்வில் முதல் நிலையில் வெற்றி பெற்றவர்களுக்கு ஒரு பரிசு அளிக்க நம் சமாஜப் பேரன்பர் ஒருவர் மூலதனம் வைத்துள்ளார். அதனால் 50/– வெண்பொற் காசுகள் முதற்பரிசாக அம்மூலதன வருவாயிலிருந்து தரப்பெறும். இளைஞருலகம் வாழ்க்கை முன்னேற்றத்திற்கான இப்போட்டியுணர்ச்சியிலீடுபட்டுப் படித்துப் பயன்பெற வேண்டுகிறோம்.

## பிற செய்திகள்

அரியலூர் மணிவாசக மன்றத்தின் 20ஆம் ஆண்டு நிறைவு விழா 12—4—64லும். சைதாப்பேட்டை குயவர் வீதி திருச்சிற்றம்பலனார் திருச்சபை 2ஆம் ஆண்டு தேவாரத்திருமுறை இன்னிசை விழா 26—4—64லும் பூவாளூர்ச் சைவசித்தாந்த சங்கத்தின் 54ஆவது ஆண்டு விழா 2, 3—5—64 ஆம் நாள்களிலும், நேமத்தான்பட்டி

Reg. M. 2330

உ
சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 37 | குரோதி வைகாசி 1964 மே | இதழ் 5

ஒலிபரப்பு:—

## கற்றூர்களேத்தும் கபாலீச்சரம்

(துணையாசிரியர்)

சம்பந்தமூர்த்தி நாயனர் திருமயிலாப்பூரை வழிபட்டார். சிறந்த ஒரு தேவாரத்திருப்பதிகமும் பாடினர். அதில் திருமயிலையையும் அங்குள்ள கபாலீச்சரத்தையும் பலவாறுகப் போற்றியுள்ளார். அவற்றில் ஒருதொடர், "கற்றூர் களேத்தும் கபாலீச்சரம்" என்பது.

அவர்கள் திருவாக்கு எவ்வளவு உண்மையானது என்பதை இன்றும் கபாலீச்சரத்தில் கண்கூடாகக் காணலாம்.

"இன்னிசை வீணையர், யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்."

என்ற மணிவாசகர் வாக்கின் பொருளை நேராகக் காண விரும்புவோர் கபாலீச்சரம் சென்மின்.

அதிலும் "இருக்கொடு தோத்திரம்" என்பது, "வடமொழி வேதங்களை ஒருபக்கம் ஆடவரும் பெண்டிரும் ஒலித்துக் கொண்டிருப்பர். மற்றெரு பக்கம் திருமுறைப் பாடல்களைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதிக் கொண்டு சிலர் இருப்பர்" என்பதேயாம்.

நாகரிகம் என்ற பெயரால் வேலைகள் நிறைந்துள்ளன என்று கோயிலுக்குச் செல்லும் பழக்கத்தைக் கூடச் சிலர் கைநழுவ விட்டு விடுகின்றனர். இவ்வாறு பல நல்ல வழக்கங்களை மறந்தொழிந்தமையால் தான் நம்நாடு தற்போது மேனாடுகள் போன்று மனநோய் பிடித்து மாழ்குறும் நிலையிலுள்ளது. அந்நோயைப் போக்க அவனை நினைந்து அரற்றித் துதிக்க வேண்டுவதைத்தவிர வேறு ஒன்றும் வழியில்லை. அதற்காகவே அங்கங்குக் கூட்டுவழிபாடு, வார வழிபாடு, குடும்பவழிபாடு செய்வது போன்ற பழக்கங்களை நம் அறிஞர்கள் வற்புறுத்தி எடுத்துக் கூறி வருகின்றனர்.

அதன்படி நம் சமாஜ அன்பர் மலேயா திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் கபாலீச்சரத்திலும் குரோதி ஆண்டு சித்திரைத் திங்கள் முதல் நாள் தொட்டுத் தினந்தோறும் காலை 7 மணி முதல் 7-45 வரை பிரார்த்தனைக் கூட்டம் என்ற ஒரு கூட்டு வழிபாட்டு முறையை ஆரம்பித்து வைத்துள்ளார்கள். பல அன்பர்கள் ஒழுங்காகவந்து இவ்வழிபாட்டில் கலந்து மனநிறைவு பெறுகின்றனர். அவர்களுடன் குழந்தைகளும் வந்து இந்நற்பழக்கத்தை இளமையிலேயே பெறவும் இம்முறை ஏதுவாக அமைகின்றது. இதனை நம் சைவ சித்தாந்த மகா சமாஜ ஆதரவிலேயே நடத்தி வருகின்றோம். "கற்றார்களேத்தும் கபாலீச்சரம்" இன்றும் சம்பந்தர் அருள் வாக்குப்படி அவ்வாறே நன்கு மிளிர்ந்து வருகின்றது. அதன் அறங்காவலர்கள் அனைவரும் கற்றார்களைப் போற்றி அவர்களுக்குறு துணையாக வழிபாட்டில் கலந்து கொள்வது மிகவும் மெச்சத்தக்கதாம்.

இது போன்றே பிற ஊர்களிலும் நம் சைவப் பெருமக்கள் கூட்டு வழிபாட்டு முறையைப் பின்பற்றுவார்களாக. பிரார்த்தனைக் கூட்டங்களை நடத்தி "வாழ்க உலகெலாம்" என்ற நம் சேக்கிழார் பெருமான் விண்ணப்பத்தைப் புதுப்பித்து மீண்டும் பெருமான் திருச்செவி ஏற்றருளும் வண்ணம் பாடிப் பரவி வழிபட்டு இறைவனின்னருளுக்குக் காளாவார்களாக.

வாழ்க உலகெலாம்.

# சென்னை மாநில புது கவர்னர்

## நல். முருகேச முதலியார் B. A.

மேன்மை தங்கிய திரு. ஜயசாமராஜ உடையார் அவர்கள் சென்னை மாநில கவர்னராக 4—5—64 அன்று பதவி ஏற்றுள்ளார்கள். தமிழ் நாடும், நம் போன்ற சமய நிலையங்களும் மன்னரவர்களது புதுப்பொறுப்பை வரவேற்று, அவரது ஆட்சி வெற்றிகரமாக இருக்க வேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனது திருவருளைப் பிரார்த்திக்கக்கடமைப் பட்டுள்ளோம்.

மன்னரவர்களது நல்ல பண்பாடும், ஆழ்ந்த படிப்பும், பரந்த நோக்கமும் தமிழ் நாட்டினருக்கு மிக்கப் பயன் படும் என்பதில் ஐயமில்லை. அவர்கள் பதவியேற்ற சில மணிகளுக்குள்ளேயே திருமயிலைஸ்ரீகபாலீசுவரர் ஆலயத்திற்கும், திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி ஆலயத்திற்கும் சென்று இறைவழிபாடு செய்து தம் புது அலுவல்களில் திருவருள் துணைநாடியது அவர்களது ஆழ்ந்த கடவுள் பக்தியை எடுத்துக் காட்டுகிறது.

மன்னரவர்கள் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி தருகையில் தாம் சைவ சித்தாந்தத்திலும் ஆழ்வார்கள் பாசுரங்களிலும், கம்பராமாயணத்திலும் ஈடுபாடுடையவர் என்று கூறியுள்ளார். தாம் தமிழ் கற்க ஆசையுடையவராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அவர்கள் தமிழ் நாட்டிலிருக்கும் போது பெரிய புராணம் முதலியவைகளையும் கற்பதற்கு வாய்ப்பிருக்குமென்பதில் ஐயமில்லை.

மன்னரவர்கள் பக்திமான் மட்டுமல்லாமல், சிறந்த தத்துவஞானிகூட என்பது பாராட்டத்தக்கது. அவர்கள் 'தத்தாத்திரேயர்' என்ற ஒரு பெருநூல் எழுதியுள்ளார். இன்னும் வேறுபல நூல்களையும் எழுதியுள்ளார்.

சில ஆண்டுகளுக்கு முன் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் சொற்பொழிவாற்றிய போது 'திருமந்திர'த்திலிருந்து ஒரு மேற்கோள் கையாண்டுள்ளது நண்பர்களுக்குக் கவனமிருக்கும். அவர்களது நுண்மாண் நுழைபுலம் அவர்கள் பேச்சுக்களிலிருந்தும், எழுத்துக்களிலிருந்தும் நன்கு விளங்கும். அவர்கள் தலயாத்திரைகள் அன்புடன் செய்து வருகிறார்கள்.

மன்னரவர்கள் பதவியேற்ற நன்னுளில் பல நல்லறங்களை நடத்தப்பணம் வழங்கியுள்ளார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் மதுரை ஸ்ரீ மீனுட்சி ஆலயத்திற்குக் கோபுரமின்விளக்கு அலங்காரங்களுக்குரூபாய்ஒருலட்சமும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ், வடமொழி, சித்த வைத்தியம், சிற்பக்கலை படிப்பவர்களுக்கு உபகாரச்சம்பளமாக மொத்தம் ரூபாய்ஒரு லட்சமும் தந்துள்ளார்கள்.

பதவியை விட்டகன்ற திரு. விஷ்ணுராம் மேதியவர்களும் தமிழ் நாட்டினிடத்திலும், தமிழ் நாட்டுத் திருக்கோயில்களிடத்திலும் மிக்க அன்பு காட்டியவர்.

கல்வியில் சிறந்த மைசூர் மன்னரவர்கள் தமிழ் நாட்டுக்குக் கவர்னராக வாய்த்ததைக் கருத சமாஜம் பெருமிதமடையத்தக்கதே. சைவ சித்தாந்தத்தில் பற்றுடையவர் என்று நோக்க சைவர்கள் மிக்க மகிழ்ச்சியடைய வேண்டும்.

---

# திருவாசகம் – இத்தி

(ஆசிரியர்)

திருவாசகம் போற்றித் திருவகவல் "இத்தி" என்ற சொல்லைக் கூறுகின்றது.

இத்தி தன்னின் கீழிரு மூவர்க்கு
அத்திக்கு அருளிய அரசே போற்றி.

இத்தி என்பது கல்லால் என்று உரைகாரர் அனைவரும் எழுதி இருக்கிருர்கள். இத்தி என்ற சொல், இச்சி என்றும் இத்தியால் என்றும் வழக்கத்தில் உள்ளது. இத்தி என்பது பலரும் வேறுபாடு அறியாத ஓர் ஆல்வகை. ஆல் இனத்தைச் சேர்ந்த ஆல், அரசு, அத்திபோன்ற பெருமரங்களில் இத்தியும் ஒன்று. இதன் இலைகள் ஆலின் இலையை நோக்க மிகவும் சிறியவை. ஆலின் இலை தைத்து உண்கலமாய்ப் பயன் படும்; இத்தி இலை பயன்படாது. ஆல் இனத்தில் ஆல் ஒன்றுக்கு மட்டும் விழுது உண்டு; மற்றவற்றுக்கு விழுது இல்லை. கல்லால் என்று தக்ஷிணுமூர்த்தி வடிவங்களில் அமைக்கப்பட்டுள்ள மரமானது இவ்வித்தி மரமேயாகும். இதைக் காவிரிக்கரைகளில் எங்கும் காணலாம்.

தலைப்பில் காட்டிய இரு வரிகளில், "இருமூவர்க்கு, அத்திக்கு" என்பதற்குப் பொருள் காண்பதில் பலர்

இடர்ப்படுகிறார்கள். இருமூவர் என்பவர் அறுவர்; இவ்வறு வரும் சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர், அகத்தியர், புலத்தியர் என்று காழித் தாண்டவராயர் கூறுகிறார். இது பொருந்தாத உரை. இயக்க மாதர் அறுவரே இங்குக் குறிப்பிட்டுள்ளவர்;

"பௌவம் மூழ்கு சூர்தடிந்த பாலனுக்கு முலே கொடுத்து
எவ்வமாய வினைகள் தீர் இயக்க மாதர் அறுவர்,"

என்று பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம் கூறும். இவர்கள் தங்களுக்குச் சிவபெருமான் உபதேசித்த அட்டமா சித்திகளை மறந்து, பின்னர்ப் பெருமான் ஆணைப்படி பட்ட மங்கை என்ற ஊரில் கல்லாய்க் கிடந்து, அவரது அருள் நோக்கம் பெற்று மீண்டும் மங்கையராகிக் கல்லாலின் நீழற் கீழ்ச் சிவபெருமானால் அட்டமா சித்தி உபதேசிக்கப் பெற்றனர் என்பது வரலாறு.

பட்ட மங்கையில் பாங்கா யிருந்துஅங்கு
அட்டமா சித்தி அருளிய அதுவும்.

என்று மாணிக்க வாசகரே கீர்த்தித் திருவகவலில் கூறுகிறார். பட்டமங்கை என்பதைப் பட்டமங்கலம் என்று நம்பி திருவிளையாடல் கூறும்.

அத்திக்கு—அத்+திக்கு, புகலிடம், என்று நவநீத கிருஷ்ண பாரதியார் உரை கூறுகின்றார். அத்தி என்பது யானை. மதுரை சோமசுந்தரப் பெருமான் செய்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களில் வெள்ளானைக்கு அருள் செய்தது என்பது ஒன்று. திருவாசகத்துள் மிகப் பலவான திருவிளையாடல்களை மாணிக்க வாசகர் கூறுகின்றார். ஆகையால் இங்கு அத்தி என்ற சொல்லால் அவ்வெள்ளானையே சுட்டப் பெறுகின்றது என்று பொருள்கொள்வதேபொருந்தும்.

"முத்திக்கு உழன்று முனிவர்குழாம் நனிவாட
அத்திக்கு அருளி அடியேனை ஆண்டுகொண்டு
பத்திக் கடலுள் பதித்த பரஞ்சோதி."

என்ற திருத்தெள்ளேணமும் (12) காணத்தகும்.

இவ்வரிகளுக்குச் சுந்தர மாணிக்க யோகீசுவரர் கூறும் யோக உரையானது, சரியை கிரியை கடக்காத நம்மனோர் சிறிதும் அறியவும் கூடாததாகும்.

# *சிவஞான பாடிய விளக்கம்

# இளைஞருக்கு

—தி. கி. நாராயணசாமி

உலகு, உயிர், கடவுள் என்ற மூன்றும் என்றும் இருப்பன. உலகு மாறுதல் அடையும் அழியா நிலையான (உள்) பொருள். உயிர் அறியாமை கலந்த (விரவிய) அறிவாகிய உள்பொருள். கடவுள் அறியாமையே இல்லாத முழு (முற்று) அறிவு உடைய உள்பொருள். இம்மூன்றில் கடவுள் கட்டு இல்லாத முழு அறிவுடையது; ஆதலால் அஃது அங்கு இங்கு எனாதபடி எங்கும் நீக்கம் அறநிறைந்தும் எல்லாவற்றையும் கடந்தும் நிற்கும் தன்மை உடையது. எங்கும் உள்ள கடவுளை விடுத்து, உலகும் உயிரும் பிரிந்து தனியே நிற்பதில்லை. இரண்டும் கடவுளின் அகண்டத்தில் கலந்தே நிற்கும்.

உயிருக்கு – உலகும் கடவுளும், கடவுளுக்கு – உலகும் உயிரும் வேண்டும். உலகும் உயிரும் இல்லை எனில், கடவுளும் தேவை இல்லை. உலகைக் கொண்டே கடவுள், உயிருக்கு நலன் செய்து உயிரைத் தன்னைப் போல் ஆக்குதல் வேண்டும். முப்பொருளும் இப்படி ஒன்றுக்கு ஒன்று நீங்காத்தேவையாய் இன்றியமையாதனவாய் இருக்கின்றன.

முன் நாளில் வாழ்ந்த மக்கள் முதலில் உலகு, பின் உயிர், இதற்குப் பின் கடவுள் உண்மையைப் படிப்படியாகக் கண்டு இருப்பார்கள். இம்மூன்று பொருள்களில் எங்கும் உள்ள கடவுள், உலகு–உயிரில் கலந்து நிற்பதை அவர்கள் நாளடைவில் உணர்ந்து இருப்பார்கள். இந்தக் கலப்பே பின்நாளில் அத்துவிதம் என்று சொல்லப்பட்டது

முப்பொருள் அத்துவிதம் (கலந்து நின்றதன்மை) பற்றி ஆராய்ச்சி வளர வளர பலதிறக் கருத்து வேற்றுமைகள் தோன்றின. அவைகளில் பல, நூல்களாகி உலவுகின்றன. அவைகளால் சிலசமயம் நன்மைகளும், சிலசமயம் தீமைகளும் விளைகின்றன. காய்தல், உவத்தல் இன்றி நடு

---

* சமாஜ பாடிய வெளியீட்டிலுள்ள திரு. வி. க. அணிந்துரையைத் தழுவிய எளிய நடை.

நின்று உண்மைகாண ஆய்வோர்க்குநல்ல பயன்களும்மற்றவர்க்குத் தீய பயன்களும் விளைகின்றன.

தத்துவ(மெய்ப்பொருள்) விதைமுதல் முதல் நம்நாட்டில்தான்விதைக்கப்பட்டது. இந்த உண்மை வரலாற்றுக் கண்ணருக்கு நன்கு விளங்கும். நம் நாட்டிற்கு 'நாவலந் தீவு' என்ற பெயர் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மிகப் பழைய காலத்தில் ஏற்பட்டது. இத்தீவில் வாழ்ந்த மக்களில் ஆத்மசத்தி (Occult power) பெற்றவர் 'சித்தர்' எனப்பட்டனர். அவர் கண்ட † முடிபே 'சித்தாந்தம்' என்பது.

சித்தாந்தம், ஒரு காலம் உலகம் முழுவதும் பரவி இருந்தது. இன்று உலகில் நிலவும் சமயங்கள் அனைத்தும் அதன் சிதைவுகளே ஆம். சிதைவுகள் ஒவ்வோர் இடத்தில் ஒவ்வொரு விதப்பெயர் பெற்று நிற்கின்றன. சித்தாந்தம், இடைநாளில் தான் பிறந்த நாட்டில் வடபகுதியில் 'வேதாந்தம்' என்றும் தென்பகுதியில் 'சித்தாந்தம்' என்றும் வழங்கியது. பின் இரண்டும் வெவ்வேறாகக் கருதப் பட்டு வாதப் போர்களும் நிகழ்ந்தன.

நம் நாட்டு மொழிகளுள் வடமொழி, தென்மொழி இரண்டும் மிகப் பழமையானவை. இவற்றில் மிகப்பழமையாக உள்ள நூல்கள் முறையே வேதம், தொல்காப்பியம் ஆகும். பழைய இருக்கு வேதத்தில் இயற்கைக் கூறுபாடுகளும், உயிர் வளர்ச்சியும், கடவுள் இயல்பும், தொல்காப்பியப் பொருள் அதிகாரத்தில், இயற்கை நிலக்கூறும், இன்பமும், ஓர்அறிவுஉயிர் முதலியனவும், கந்தழிக் கடவுள் நிலையும் சொல்லப்பட்டு இருக்கின்றன.

வடமொழி வேதம் நாளுக்கு நாள் பெருகி, அதில் புகுந்த ஞானப் பகுதியாகிய உபநிடதம் (வேதாந்தம்) உலகைக் கவர்ந்து பெருகிற்று. பலர் அதில் படிந்து ஆழம் காண, வியாசர் தம் நுண் அறிவால் வேதாந்த (பிரம்ம) சூத்திரம் எழுதினார் இதற்குப் பேருரை (பாடியம்) கள் பலரால் எழுதப்பட்டன. இவை தோன்றுவதற்கு முன், ஒரே கருத்தில் வேதாந்தம், அறிஞரால் கொள்ளப்பட்டு வந்தது. பேருரைகள் தோன்றிய பின்னர் வேதாந்தத்தின்

† திரு. வி. க. நூல் 'சித்த மார்க்கம்' பார்க்க.

ஒருமை நோக்கம் நாளடைவில் பாழ்படலாயிற்று. சிவாத்துவிதம், கேவலாத்துவிதம், விசிஷ்டாத்துவிதம், துவிதம் என்று வேதாந்த உலகில் கிளைகள் பிரிந்தன. அவைகளின் மீது செடி கொடிகளும் தூறுகளும் படர்ந்தன.

பேருரைக்காரர்கள் பெயரால் மடங்களும் தொன்று தொட்ட வழக்கங்களும் (சம்பிரதாயம்) ஏற்பட்டன. அவைகளை ஒட்டி வாதங்களும் பிணக்குகளும் எழுந்தன. மூலத்தின் ஒருமை, மக்களின் உள்ளத்தை விட்டு இழிந்து வீழ்ந்தது. உரைகளின் பன்மை மேலெழுந்து ஆட்சி புரிந்தது. உரைகாரர்கள்மீது பழி சுமத்துவது அறியாமை. அவர்கள் தம் காலத்திற்கு ஏற்றபடி உரைகள் எழுதினார்கள். அவைகளை ஒட்டி ஏற்பட்ட மடங்களும் பிறவும் பழிக்கு உரியன ஆம்.

உயர்திணை உலகம், என்றும் ஒரு தன்மையாய் இருக்காது. அதன்கண் கருத்துவேற்றுமைநிகழ்வது இயல்பு. சில சமயம் மூன்று பொருளில் ஒன்றை விட்டு மற்று ஒன்றை உலகம் கொள்ளும். அதனால் வாழ்வும் குலையும். அக்காலத்தில் சான்றோர் தோன்றி உலகம் கைவிட்ட ஒன்றை வலியுறுத்திச் செல்வர்.

ஒரு சமயம் நம் நாட்டவர் உலகை மறந்து, வாழ்வை வெறுத்து, கடவுள் பெயரால், வேதத்தின் பெயரால் கொலை, வேள்வி செய்தனர். எளிதில் வீடுபேறு எய்தலாம் என்ற உறுதி மக்களிடை நிலை பெற்றது. அந்நாளில் புத்தர் தோன்றி, உலகியலின் பெருமையைப் புலப்படுத்தி, கொல்லா அறத்தின் சிறப்பை உயிர்களுக்குக் கூறினார். கடவுள் கடவுள் என்று வாயால் பேசி, வெறி கொண்டு தீச்செயல் செய்து வந்த மக்கட்குக் கடவுள் உபதேசம் செய்யப் புத்தர் முன்வரவில்லை. அக்காலப் போக்கிற்குக் கடவுள் உபதேசம் தேவை அற்றது என்று அவர் கருதினார் போலும்!

காலநிலை நோக்கிக் கடவுள் உண்மையை வலிஉறுத்தாது புத்தர் சென்றதால், அவர் வழிவழி வந்த சிலர் அறநெறி நிற்பதில் கருத்துச் செலுத்தாது, கடவுள் உண்மையை மறுப்பதில் மட்டும் கருத்தைச் செலுத்துவார்

ஆயினர். அவர் பிரசாரத்தால் நாத்திகம் பரவிற்று. அதைக் கடியச் சங்கரர் தோன்றினர்.

புத்தர் பெயரால் அறிவற்ற (சடம்) பொருள் உண்மை மட்டும் வலியுறுத்தப்பட்டு, அறிவாகிய கடவுள் உண்மை மறுக்கப்படுவதைச் சங்கரர் கண்டார்; மக்கள் உள்ளத்தில் அறிவாகிய கடவுள் உண்மை உலவாது, சடத்தின் உண்மை ஒன்றே நிலவியதால், மக்கள் மன நிலையை மாற்ற, அறிவாகிய கடவுள் ஒன்றே உண்மை என்றும், அறிவுக்கு வேருகப்பிறபொருள் இல்லை என்றும் அறிவுறுத்தத் தலைப்பட்டார். அந்நோக்குடன் பேருரையும் எழுதினர். காலத்திற்கு ஏற்ற தொண்டை, சங்கரர் செய்தார்.

"அறிவாகிய கடவுள் ஒன்றே" என்ற தலைசிறந்த கருத்தில் நிலைத்து நில்லாது, அதற்கு வேருகப் பிறபொருள் இல்லை என்பதிலே மக்கள் தலைப்பட்டார்கள். அதனுல் சங்கரர் உலகியல் (விவகார) நிலையினர்க்கு வேண்டியது என்று சொல்லியும் செய்தும் காட்டிய கடவுள் வழிபாட்டுக்கு இடர் நேர்ந்தது, அதைப் போக்க இராமாநுஜர் வந்தார். அவர், ஜக–ஜீவ–பர உண்மையை நிலைநாட்டி, ஆண்டான் அடிமைத் திறத்தை வலி உறுத்திக் கடவுள் வழிபாட்டின் அவசியத்தை உலகுக்கு உரைத்தார். இவை யாவும் காலத்திற்கு ஏற்றபடி ஆன்ருேர் கருத்து வெளிவருவதை உணர்த்துகின்றன.

உரை (பாஷிய) காரர்கள் உள்ளக் கிடக்கைகளை வரலாற்றுக் கண்ணுல் நோக்கினுல் மாறுபாட்டிற்கு இடமே நேராது. மடங்களும் தொன்று தொட்ட வழக்கங்களும் அறிவு விளக்கத்திற்குத் தோன்ற வில்லை. அவை, உரைகாரர்கள் பெயரால் கட்டுப்பாடுகளையும் மூட வழக்க ஒழுக்கங்களையும் வளர்க்கவே தோன்றின. இவைகளால் அறியாமை பெருகி, பிணக்குகள் மலிந்தன. முப்பொருள், அத்துவிதம் பற்றி சொல், மல் சண்டைகள் அங்கு அங்கே நிகழ்ந்தன. உண்மைகாணும் நல்ல முயற்சி எழவில்லை. எங்கும் குழப்பம் பெருகியது.

பொருள் உண்மையைப் பற்றிக் குழப்பம் நிகழும் போது பெரியோர் தோன்றுதல் மரபு. அதன்படி மெய்

கண்டார் தோன்றினர். அவர் சிவஞானபோத நூலை அருளினர். அதன் வழி நூல் சிவஞான சித்தியார்; புடைநூல் சிவப்பிரகாசம்; ஏனைய சார்பு நூல்களும் தோன்றின. இந் நூல்களால் குழப்பங்கள் எல்லாம் இரிந்து ஓடின. முப்பொருள், அத்துவிதம், வேதாந்தம், வேதாந்த சூத்திரம் இவற்றின் உள்ளம் நேரிய முறையில் உலகத்திற்குப் புலனாயின.

சிவஞான போத வரலாறு பற்றி நாட்டில் பலவித கட்டுக்கதைகள் வழங்குகின்றன. இவை யாவும் தென் முகக் கடவுளின் ஒருகையில் சிவஞான போத நூல் இருப்பதைச் சொல்லத் தவறியதில்லை. தென்முகத் தெய்வம், உலகில் உள்ள பழம்பெருஞ் சமயங்களுக்கு எல்லாம் மேலான குரவராக (பரம ஆசாரியர்) விளங்குவது. முன் நாளில், இவருக்கே வந்தனை வழிபாடுகள் நடைபெற்று வந்தன. இவரே தலைமைக்குரவர் என்று தியொசாபிகல் சங்கத்தை அமைத்த பிளவட்ஸ்கி அம்மையாரும் தம் நூல்களில் வலியுறுத்தியுள்ளார்.

தென்முகத் தெய்வம் அமைதி (சாந்தம்) மயமாய் இருப்பது; சொல்லின் பொருள் கடந்த நிலையில் அமைதி நிலவுவதை அறிவுறுத்துவது. 'சாந்தம், சாந்தம், சிவம்' என்ற நுட்பத்தின் அறிகுறியாக விளங்குவது. அக்கடவுளின் ஒருகையில் *சின்முத்திரையும், மற்றொரு கையில் சிவஞான போத நூலும் திகழ்கின்றன. இம்முத்திரை, மூன்று பொருள் உண்மையைத் தெரிவிப்பது. பெருவிரல் கடவுள் (பதி); சுட்டு விரல்–உயிர் (பசு); மற்ற மூன்று விரல்கள் ‡ மூன்று மலங்களாகியபாசம்மும் மலங்களிலிருந்துநீங்கிக்கடவுளுடன்சேர்தல் வீடுபேறு என்பதுகருத்து. இவைகளின் உள்ளுறை சிவஞான போதம் என்பது. சின் முத்திரையும் சிவஞான போதமும் பொருளில் ஒன்றே. இரண்டும் இருவகைகளாகச் சொல்வது தத்துவம். பிற உறுப்புக்களும் தத்துவங்களே! (தொடரும்)

---

* பெருவிரலும் சுட்டு விரலும் ஒன்று சேர்ந்து (ஒன்றி) மற்ற மூன்று விரல்களும் தனியே சேர நிற்கும் குறி.

‡ ஆணவம், கன்மம், மாயை.

# சைவ சமயத்தின் இக்கால நிலை

கா. இராமநாதன் B.A., B.L.

மலேயாவில் கிறிஸ்தவ பாடசாலைகளிலேயே சைவச் சிறுர்கள் கல்வி பயின்று வருவதாகவும், அவர்கள் பொட்டிட்டு விபூதி தரித்துக் கொண்டு பாடசாலைகளுக்குச் செல்ல முடிவதில்லை யெனவும், சமய ஆர்வத்தினுல் அங்ஙனம் அணிந்துகொள்ளினும். பாடசாலைக்குச் செல்லும் பொழுது அவற்றை அழித்துவிட்ட பின்னரே பாடசாலைகளில் அடியெடுத்து வைக்க முடிகிறதெனவும் இக் காரணங்கள் பற்றிச் சைவக் கழகங்கள் மூலம் சமய அறிவு வளர்ச்சிக்குஆவன செய்யவேண்டியிருக்கிற தெனவும் குறிப்பிட்ட அப்பெரியார் மேலும் கூறியதாவது!

மலேயா நாட்டுச் சைசவ மக்களுக்குக்கிடையாத சமயச்சுதந்திரம் இந்நாட்டு மக்களிடையே யிருப்பதை நான் காணமுடிகிறது. இது எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது. இங்கு உள்ள இந்துக்கல்லூரிகள்சைவ சமயத்தையே கைக்கொண்டு ஒழுகி வருகின்றன என்னும் உண்மை மாணவர்களது சைவ அறிவைக் கொண்டு உணர முடிகிறது. ஆயினும், சைவ ஒழுக்கமே அறிவினும் சிறப்புற அமையவேண்டும். அவ்வொழுக்கமும் ஒழுகிக்காட்டுவார் இன்றி யாருக்கும் அமையாது.

பழைய காலத்தில் சைவ ஒழுக்கம் சிறந்து விளங்கியது. சைவ ஒழுகலாறுகளுக்கு நாயன்மார்கள் எடுத்துக்காட்டாக விளங்கினுர்கள். அறிவுரை பகருவதிலும் பார்க்கச் 'சேவை' செய்வதே அவர்களது பெருநோக்கமாயமைந்தது. மக்கள் நல்வழியிலே ஒழுகி ஈடேறுவதற்குத் தடையானவற்றை நீக்கி உதவுவதே சேவை என்பது.

தாமனென்னும் வணிகன் பணவாசை கொண்டவன். அவனுக்கு ஏழு புதல்வியர். அவன் தன் மருகனிடம் பணத்தைப் பற்றிக் கொண்டு தம் புதல்வியருள் ஒருத்தியை மணமுடித்து வைப்பதாக உறுதி கூறினான். ஆயினும் அங்ஙனஞ் செய்தானில்லை. அதிக பணங் கொடுத்தாருக்கு முதல் ஆறு பெண்களையும் தத்தஞ் செய்தான்; சத்தியந் தவறினான். ஏழாவது புத்திரி தந்தையின் பிழையை நீக்கக் கருதினாள். தன் அத்தானுடன். இரவோடிரவாய் வெளியேறினாள். எனினும் ஒழுக்கந் தவறினாளில்லை. அவள் தன் அத்தானைத் தொட்டு மறியாள். அந்நிலையில் திருமருகலில் இரவை இருவருங் கழித்தனர். அவளது அத்தானை அரவு தீண்டிற்று. அவள் அரற்றினாள் அவனைத் தொட்டெழுப்பினாலோ! என்று ஆர்வந்தூண்டினும் கற்பொழுக்கந் தடுத்தது. அவள் துயரை அவளே அறிவள். அத்தகைய பெருந்துயரை அறிந்த ஞான சம்பந்தப் பெருமான் நம்மனோர் போல அவள் விட்ட பிழையிது என்று சுட்டியுரைத்துக் கண்டிக்க வில்லை. கண்டிப்பதனால்மேல் விளையத்தக்கதோர்பயனுமில்லை; கண்டிக்கத் தக்கதோர் சமயமும் அதுவன்று. ஆதலால், அவளது எதிர்கால நிலையைச் சிந்தித்தார்; அவள் தந்தை தாயின் ஆதரவின்றித் தான் நம்பிவந்த அத்தானின் துணையுமின்றி அநாதையாய் அல்லற்படும் அவல நிலை காட்சியளித்தது. எல்லாவுயிருந் தன்னுயிர் போல் எண்ணி இரங்கும் மன நிலை கொண்ட பெருஞான சம்பந்தர் அவளுக்கு அச்சந்தர்ப்பத்திற் செய்தக்க சேவை எது என்று தெளிந்து கொண்டார்; அவளை வாழ்வித்து நற்பயனடைய வைக்க விரும்பினார்; மக்கள் சேவையே மகேசுவர சேவையாகும் என்று துணிந்தார். "சடையாய் எனுமால்" என்றெடுத்து இறைவனை வேண்டிப் பதிகமோதினார்; அத்தானுக்கும் அவளுக்கும் வாழ்வளித்தார். ஏழைபங்காளனும் இறைவனுக்கு அன்பான சம்பந்தப் பெருமான் ஏழைக்கிரங்கிச் சேவை செய்த அது அவர் செயலன்று; அவன்செயலேயாம்.

திருநாவுக்கரசர் வீதிபெருக்கியதும், சுந்தரர் நெல்லுப் பெற்றுதவியதும், அப்பர் சம்பந்தரிருவரும் படிக்காசு பெற்றீந்ததும் இன்னோரன்ன பிறவும் சைவ மக்களுக்குத் திரிகரண சுத்தியோடு செய்த பெருஞ் சேவைகளேயாகும்.

பகவானுக்குச் செய்யுந் தொண்டு, பாகவதாளுக்குச் செய்யுந் தொண்டு ஆகிய இரண்டனுள், முன்னதற்குப் பின்னது முரண்படுமானால் முன்னதைவிட்டுப் பின்னதாகிய பாகவதாளுக்குச் செய்யுந்தொண்டையை செய்க'' என்று வைணவ மதக் கொள்கை வலியுறுத்துவதும் சிந்திக்கத் தக்கது.

இன்று பிற மதத்தில் உள்ளவை போல, சைவ மக்களது தொகைக்குத்தக்க சமயஸ்தாபனங்கள் இல்லை; இச்சமய ஒழுக்க முடையார் அருகி விட்டனர். விரல் விட்டு எண்ணக்கூடிய இவர்களிலும் பலர் தம்மைப் பிறர் கனம் பண்ண வேண்டும் என்பதற்காக ஒழுக்க முடையவர் போல நடிக்கிறார்கள். "யார்'' தம்மை வணங்க வேண்டு மென்று நினைக்கிறாரோ'' அவரை வணங்காதே, என்று ஞானியார் சுவாமிகள் கூறுவார்கள். தம்மைத்தாமே கனம் பண்ண முயல்வோராலும், சமய வளர்ச்சி — அறிவு — ஒழுக்கங்கள் தடைப்பட்டு விடுகின்றன.

தன்னறிவு பெரிதென்று எண்ணிச் சமயஞ் சொல் பவனிடம் நல்லொழுக்க மிராது; அவனிடம் சமயங் கேட்டல் கூடாது.

சமய அபிவிருத்தி சைய்யும் பணியில் ஈடுபடுவதற்கு அநுபவத்தாலும் வயதாலும் முதிர்ந்த பெரியவர்களே உகந்தவர்கள். அவர்கள் குடும்ப பாரத்தினின்றும் நீங்கியவர்களாய்ப் பரிபூரண தொண்டாற்றத்தக்கவர்களாவர். வம்பிற் கனிந்தகனி — பிஞ்சிலே பழுத்தபழம்— உதவாது. முற்றிக் கனிய வேண்டும். கனிந்த அக்கனியும் தானிருந்த கொடியிலோ செடியிலோ மேலும் இராது. அதற்கும் உதவாது; அதனை விட்டு நீங்கிப் பிறருக்கே உதவும். இக்கனி போன்றவர்களே சமயாநுபவத்தாலும் வயதாலும் முதிர்ந்த

பெரியார்கள். ஆதலால் அவர்களை சமயக் கல்வி ஒழுக்க விருத்திகளில் ஈடுபட வேண்டியது இற்றை நிலைக்கு ஏற்றதாகும்.

இந்நாட்டின் சமய அறிவை விருத்தி செய்வதற்குச் சிறந்த கழகங்களும் இருக்கின்றன 50, 60, பேர் அடங்கிய சைவப்புலவர்கழகம் ஒன்று நல்ல முறையில் இயங்கிவருவதாக அறிகிறேன். சைவ சித்தாந்த சமாசம் அவர்களை வழிப் படுத்துகிறது; அவர்கள் நிரம்பப்படித்தவர்கள்; சமயந் தெரிந்தவர்கள். அவர்களது சேவை இந்நாட்டுக்குஎன்றென்றும் தேவை. மேன்மேலும் தம் பணியை உயர்ந்த நோக்கத் தோடு செய்வார்களாக.

---

[யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்துள்ள மலேய சைவ சித்தாந்தக் கழகத் தலைவர் திரு. கா. இராமநாதன் B.A., B.L. அவர்கள் நாவலர் மண்டபத்தில் சமயத்தின் இக்கால நிலை என்னும் பொருள் பற்றி யாற்றிய சொற்பொழிவு.]

---

கலைப் பகுதி:—

# திருமுறைகளில் இசை நாடகத் தமிழ்ச் சொற்கள்

பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை, ப. சுந்தரேசன்.

முதற்றிருமுறை முதற்பதியம்

திருப்பிரமபுரம் (சீகாழி)

நட்டபாடைப் (நைவளம்) பண்ணில் அமைந்துள்ள ஆளுடையபிள்ளையாரின் அருட்பதியங்களில் 'தோடுடைய செவியன்' எனும் முதற்பதியத்தில் அமைந்த சொற்களை (இசை நாடகம்) ஈண்டு முதற்கண் குறித்தே முறையே ஒவ்வொரு பதியத்தையும் எடுத்துக் கொள்வோம்.

முதற்பதியத்தலைப்பு =1 தோடுடைய செவியன். இப் பதியத்தில் ஆறுவது பாடலில், "மறை கலந்த ஒலி பாட

லோடு ஆடலராகி'' என வருவது கொண்டு, இசைத் தமிழ்ச் சொற்கள்,

1 — ஒலி
2 — பாடல்

நாடகத் தமிழ்ச் சொற்கள்.

1 — ஆடல், என நம் முத்தமிழ் விரகரின் அருட் சொற்கள் சிவநெறிக் கலைப்பகுதியை விளக்கு முகத்தான் தொடங்குவது அறியலாம்.

ஏழாவது பாடலில், 'வீசிச் சதிர் வெய்த' எனுமிடத்து அமைந்த சதிர் எனும் சொல், பிற்கால நாட்டியத் தமிழ்ச் சொல்லாயிற்றென்பதை நன்குணரலாம். தஞ்சாவூர்ச் சதிர் ஒரு தனிக் கலையாக விளங்கியதுண்டு.

ஒன்பதாவது பாடலில் 'வாள் நுதல் செய்மகளீர், எனும் சொற்கள் அக்காலத்திய ஆடற்றமிழ் பயின்று காழியெம்பெருமானுக்குத் தொண்டு (கோயிற்றொண்டு) புரிந்தோரைக் (ஆடன்மகளிர்) குறிப்பிடுவதறியலாம்.

நிறைவு = ஞானசம்பந்தன் உரைசெய்த திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே.

## இரண்டாங் திருப்பதியம்

திருப்புகலூர்: —

முதற்பாடலில் 'குறிகலந்த இசை' எனும் சொற்கள், நரம்பின் ஒலிகளுக்கு ஏற்படுத்திய குறியீட்டெழுத்துக் களை உணர்த்துவனவாகும்.

இ. த. சொ. = 3. குறி
,, = 4. இசை

மூன்றுவது பாடலில், 5. பண். இது பண்ணிலாவும் மறை, எனக் கூறப்பெறுவதாலறியலாம்.

ஆறுவது பாடலில், 'கழலின் ஓசை' 'சிலம்பின் ஒலி யோசை' 'குழலின் ஓசை' 'விழவின் ஓசை' 'முழவின் ஓசை' எனுமிடத்து,

இ. த. சொ. = 6. ஓசை
,, = 7, குழல்
,, = 8. முழவு

நிறைவு=ஞானசம்பந்தன் தமிழ்மாலை பற்றி என்றும் இசை பாடிய மாந்தர் பரமன் அடிசேர்ந்து குற்றமின்றிக் குறைபாடு ஒழியாப் புகழோங்கிப் பொலிவாரே.

## மூன்றும் பதியம்

**திருவலிதாயம்:—**

இப்பதியம் நான்காவது பாடலில் 'பாடும் அடியார்க்கே' என்ற சொல்லும் எட்டாவது பாடலில் நடமாடி என்ற சொல்லும் தவிர, தனித்த முறை இசை நாடகத் தமிழ்ச் சொற்கள் இல்லை.

நிறைவு = ஞானசம்பந்தன் தமிழ் பத்தும் கொண்டு வைகி இசை பாட வல்லார் குளிர் வானத்துயர்வாரே.

## நான்காம் பதியம்

**திருப்புகலியும் திருவீழிமிழலையும்:—**

மூன்றும் பாடலில், 'கன்னியராடல்' எனும் சொற்களும், இன்னிசை யாழ் மொழியாள், எனும் சொற்களும் இருத்தலால்,

இ. த. சொ. — 9. யாழ்

எனும் சொல் முதன் முதலாக வருவதறியலாம். பதியம் 2ல் குழல், முழவு வர பதியம் நான்கில் யாழும் வந்தது.

நிறைவு = ஞானசம்பந்தன் சொன்ன பண்ணியல் பாடல் வல்லார்கள் இந்தப் பாரொரோடு விண்பரிபாலகரே'. இங்கு பண்ணியல் என்பது ஆறு இசைகளைக் கொண்ட பண்ணியற்றிறப் பண்ணாகும்.

## ஐந்தாம் பதியம்

**திருக்கிழைத் திருக்காட்டுப்பள்ளி:—**

ஆறுவது பாடலில்"துளைபயிலுங் குழல் யாழ்முரலத் துன்னிய இன்னிசையால் துதைந்த" என்ற சொற்களும் வந்து பின்னர், நிறைவு='காழியர் கோன் துன்னிய இன் இசையாற்றுதைந்து சொல்லிய ஞானசம்பந்தன் நல்ல தன்னிசையாற் சொன்ன மாலை பத்துந்தாங்க வல்லார் புகழ் தாங்குவரே.' என அமைந்திருப்பதறியலாம்.

## ஆறும் பதியம்

**திருமருகலும் திருச்செங்காட்டங் குடியும்:—**

ஐந்தாம் பாடலில் 'பாடல் முழவும் விழவும் ஓவா' என்ற சொற்களும் 'செந்தமிழோர்கள் பரவியேத்தும்'

என்ற சொற்களும் வந்துள்ளன. நிறைவு = சூலம்வல்லான் கழல் ஏத்து பாடல் சொல்லவல்லார் வினை இல்லையாமே.

## ஏழாம் பதியம்

**திருநள்ளாறும் திருவாலவாயும்:—**

முதற்பாடலில், நா. த. சொ, 8 நாடகம், என்றசொல் வந்து மூன்றும் பாடலில், அண்ணலின் பாடல், நான்காம் பாடலில், நாவினிற் பாடல், ஐந்தாம் பாடலில், 'பாட்டும்' ஏழாம் பாடலில், 'நாவணப் பாட்டு' ஒன்பதாம் பாடலில் மணியொலி, சங்கொலி, மாமுரசின் ஒலி, என்ற சொற்கள் எல்லாம் வந்துள்ளமை அறியலாம்.

நிறைவு = ஞானசம்பந்தன் சொன்ன இன்புடைப் பாடல்கள் பத்தும் வல்லார் இமையவரேத்த இருப்பர் தாமே.

## எட்டாம் பதியம்

**திரு ஆவூர்ப் பசுபதியீச்சரம்:—**

முதற்பாட்டில், இ. த. சொ. 10 பண்ணியல், இதனை பண்ணியற்றிறம் எனப் பழந்தமிழ் கூறும். ஐந்தாம் பாடலில் வந்தணைந்து இன்னிசை பாடுவார், பத்தாம் பாடலில் பன்னிய பாடல், எனவந்துளது. நிறைவு = ஞானசம்பந்தன் சொன்ன கொண்டு இனிதா இசை பாடி யாடிக் கூடுமவர் உடையார்கள் வானே.

## ஒன்பதாம் பதியம்

**திருவேணுபுரம் (சீகாழி)**

மூன்றும் பாடலில் 'நடந்தாங்கிய நடையார்' என்று சொற்கள் வந்தன.

நிறைவு—'பந்தன்தன பாடல் ஏதத்தினை இல்லா இவை பத்தும் இசை வல்லார் கேதத்தினை இல்லார் சிவகெதியைப் பெறுவாரே.

## பத்தாம் பதியம்

**திருவண்ணமலை**

இப்பதியத்தில் நாம் தேடும் கலைச்சொற்கள் இலவாயினும் 'ஞான சம்பந்தன் தமிழ் வல்லவர் அடிபேணுதல் தவமே' என நிறைவெய் துகிறது.

(தொடரும்)

# கருணைமலை

ந. வீ. செயராமன், எம். ஏ.,
விரிவுரையாளர், தமிழாராய்ச்சித்துறை, அண்ணாமலைப்
பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

பஞ்சபூதத் தலங்களுள் தீ வடிவாக இறைவன் எழுந்தருளியிருப்பது திருவண்ணாமலை என்னும் திருப்பதியாகும். அண்ணாமலையானையும், உண்ணாமுலையம்மையையும் நெஞ்சம் நெக்குருகப்பாடிமகிழ்ந்தவர் துறைமங்கலம் சிவப்பிரகாசர் என்னும் நிறைமொழியறிஞர். மின்னவிர் சடிலக் கற்றையும், அருள் கூர் விழிகளும், திருமுகத்தழகும், கன்ன விறிரடோள் நான்கும் ஈரடியுமாக இருக்கும் அண்ணாமலையானின் அருளுருவைக் கண்டு தித்திக்கும் செந்தமிழில் பக்திப்பாமாலைசூட்டிமகிழ்ந்தார்சிவப்பிரகாசர். வெள்ளத்தின் பெருக்கைப் போல் கவிப் பெருக்கும் கலைப்பெருக்கும் நிறைந்து, உள்ளத்தைச் சிவன்பால்செலுத்திய இச்சிவநேசச் செல்வர் இயற்றிய சோணசைலமாலை நூறு பாடல்களைத் தன்னகத்தே கொண்டது; சோணசைலனே கைலைநாயகனே எனச்செய்யுள் தோறும் மகுடம் பெற்று விளங்குகின்றது.

அண்ணாமலையான் அக்னிவடிவாய் எழுந்தருளியுள்ள திருவண்ணாமலையில் கார்த்திகைவிழாபெருஞ்சிறப்புடையது. “கார்த்திகை விளக்குத் தடமுடியிலங்க வளர்ந் தெழுஞ் சோணசைல” நாதனை,

கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து
கண்டவ ரகத்திரு ளனைத்துஞ்
சாய்த்துபின் றெழுந்து விளங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே

என்று சிவப்பிரகாசர் பாடிப்பரவுகின்றார். ‘வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை மாமலர்த்தூவித்துதிப்பதனைச் சிவப்பிரகாசர் பாடுகின்றார்,

கண்கணிற் பரிந்து கண்டுவப் பனவே
கைகணிற் றொழுபவே செவிகள்

பண்கணிற் புகழும் புகழ்ச்சிகேட் பனவே
பதுமினை வலம்புரி வனவே

இப்பகுதி அப்பர் பெருமானின் திருஅங்கமாலைக் கருத்தை அடியொற்றி அமைந்ததாகும். பொறிகளைச் சென்ற விடத்தாற் செலவிடாது தீதொரீஇ நன்றின் பால் உய்க்க எண்ணிய சிவப்பிரகாசர்,

நின்னையே நோக்கி விடாதகட் புலனும்
நின்னையே நினைக்கும் நெஞ்சகமும்
நின்னையே துதிக்கும் நாவும்..............
அருள்க என்று இறைவனை வேண்டுகின்றார்.

நாளும் இன்னிசையால் நற்றமிழ் வளர்த்த ஞானசம் பந்தப் பெருமானிடத்தும், சூலைநோய்தந்து ஆட்கொள்ளப் பட்ட ஆளுடை அரசரிடத்தும் சிவப்பிரகாசருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு, 'செம்மை பெறவெடுத்த திருத்தோடுடைய செவியனெனும் மெய்மை மொழித் திருப்பதிகம் பாடி வேயுறு தோளிபங்கனை விடைமீது கண்டு அம்மையின் அருளமுத ஞானப்பால் உண்டு சிவஞானம் பெற்ற இளங்கன்று சம்பந்தர். 'அரனோடு வந்து அம்மை யளித்த வள்ளப் பாலைப் புரை தீரவுண்ட' சம்பந்தரைப் பற்றி

'ஊனமில் காழிதன்னுள் உயர்ஞானசம்பந்தர்க் கன்று
ஞானம்அருள் புரிந்தான் நண்ணுமூர்நனிபள்ளியதே

என்று நம்பியாரூரர் பாடுகின்றார்.

இனி, மாதர்ப் பிறைக் கண்ணியானை, தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான சங்கரனைக் 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' என்று போற்றித் தொழுது உடலுறு நோய் தீர்ந்தவர் நாவுக்கரசர். அறம் தெரியா ஊத்தைவாய் அறிவில் சிந்தை ஆரம்பக் குண்டரோடயர்த்து நாளும் மறந்தும் அரன் திருவடிகள் நினைபமாட்டாத நிலையில், நாவுக்கரசருக்கு இடரூறு நோய் தந்து மீட்டுக் கொண்டார் இறைவன். பக்தி மணங்கமழும் இச்சிவநேசச் செல்வர்களிடத்து ஈடுபாடு கொண்ட சிவப்பிரகாசர் அவர்களை முன்னிறுத்தி

இறைவனை வேண்டுகின்ற பகுதி நிறையின்பம் நல்கும் பெற்றியுடையதாய்த் திகழ்கின்றது.

'யாவுமா முமையுண் ணாழலை முலைப்பா
　　லீந்துபா டச்செயா யெனினும்
மேவுமா துயர்செய் சூலைநோ யெனினும்
　　விடுத்துநிற் பாடுமா றருளாய்'

சிவப்பிரகாசரின் இச் செந்தமிழ்க்கவிதை சிந்தை முழுதும் இன்பம் விளைக்கின்றது.

சிவப்பிரகாசர் சோண சைல நாதரை பிறவி தருமாறு வேண்டுகின்றார், ஆம்! பிறவிதான் வேண்டுமென்று பாடுகின்றார். ஆனல் அப்பிறவி எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று வேண்டுகின்றார் தெரியுமா? "மதுரம் பெருகும் தமிழ்ச் சொன் மலர் நினக்கணியும் பிறவியே வேண்டுவன்றமியேன்" என்று அவர் கூறுகின்றார். குமானேயெனவும் மதனவேளெனவும் புன்றொழில் மனிதரைப் புகழ்ந்து, பாழ்க்கிறைக்கும் புலமை தீர்த்து, இறைவன் திருவடிமலர்க்கு அன்பு செயும் மெய்த் தொண்டர் கணத்தினுள் எனை விடுப்பாய் என இறைவனை நெக்குருக வேண்டும் பகுதியில் சிவப்பிரகாசரின் சீரிய இறையன்பினைத் தெற்றெனக் காண்கின்றோம்.

சிவப்பிரகாசர் செந்தமிழ்ப் புலமை மிக்கவர். கற்பனை யலங்காரக் கவின் ஒளிர, கற்கண்டு கனிதேனென்னப் பொற்பமை நற்கவி சொல்லும் வல்லமை பெற்றவர் சிவப்பிரகாசர்.

'தவம்பழுத்த துறவுடையான் தமிழ் பழுத்த உள
　　　　　　　　　　　　　　　முடையான் தாரணிக்கே
சிவம் பழுத்த உண்மையினைப் பத்திநயம் பல
　　　　　　　　　　　　　　　நாட்டித் தெளிவு கூட்டி
நவம் பழுத்த தமிழ் நூல்கள் நல்குசிவப் பிரகாச
　　　　　　　　　　　　　　　நற்றவத்தோன்'

என்று சிவப்பிரகாசரின் தமிழ்ப் புலமையைத் தக்கோர் பாராட்டுவர். சிவப்பிரகாசர் சொல்லும் கவியெல்லாம் சொற்சிலம்பம் ஆடும்,

மொழிதரு கருணை மலையெனும் பெயரன்
மொழியொரீஇ வேற்றுமைத் தொகையைத்
தழுவுற நின்று வளர்ந்திடுஞ் சோண
சைலனே கைலை நாயகனே!

என்ற செய்யுளில் சிவப்பிரகாசரின் புலமை நலம் பொதிந்து கிடக்கக் காண்கின்றோம். இறைவருக்கு இங்கு இருமலைகளை உரிமையாக்கிக் காட்டுகின்றார் ஆசிரியர். கருணைமலை ஒன்று: திருவண்ணாமலை மற்றொன்று, அண்ணாமலையானாய் திருவண்ணாமலையில் தீவடிவினனாக எழுந்தருளுமுன் கருணை மலையானாகக் காட்சி தந்தான் இறைவன். அதாவது கருணையாகிய மலையையுடையானாக அல்லது மலைபோலுங் கருணையுடையானாக இருந்தான். கருணைமலை என்னும் தொடர் கருணைமலையாகிய இறைவனைக் குறிப்பதால் அன்மொழித் தொகையாக இங்குவிளங்குகின்றது. பின், அண்ணாமலையானாய் எழுந்தருளியபின் கருணையையுடையமலை என்று வேற்றுமைத் தொகையாக அத்தொடர் மாறுகின்றது. இதனையே கருணைமலை என்றும் பெயர் அன்மொழியொரீஇ வேற்றுமைத் தொகையைத்தழுவுற நின்ற இறைவன் என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகின்றார்.

அணிநலமும் பொருள் வளமும் நிறைந்து பக்திமணங் கமழும் இத்தெய்வப்பனுவலைக் கற்று மகிழ்தல் வேண்டும். விடையேறும் பெம்மானை விடமுண்ட கண்டனைக் கண்டு காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க, சிவப்பிரகாசர் பாடிய இச் செந்தமிழ்ப் பனுவலைத் தொட்டாலும் கை மணக்கும்; சுவைத்தாலும் வாய் இனிக்கும்; நினைத்தாலும் நெஞ்சம் இனிக்கும்.

# வடமொழிச் சிவஞான போதத்தின் காலம்

(மு. அருணுசலம்)

"சிவஞான போதம் தமிழ் முதல் நூலே, மொழி பெயர்ப்பன்று என்பதற்கு 120 காரணங்களைக் காட்டி சைவ சித்தாந்த மகா சமாஜத் தலைவர் காலஞ்சென்ற ம. பால சுப்பிரமணிய முதலியாரவர்கள், மிகத்திட்டமாக நிறுவியிருக்கிறார்கள். சித்தாந்தம் 1949, பக்கம் 169–195) எல்லாக் கூற்றுக்களையும் மிகத்தெளிவாக அவர்கள் ஆய்ந்து, தம் கருத்தை மறுக்க இடமின்றி ஆணித்தரமாக நிரூபித்திருக்கிறார்கள். மேலும் இரு காரணங்களைக் கூறி வடமொழி நூலின் காலம் இன்னதென்று வரையறை செய்வதே இக்குறிப்பின் நோக்கம்.

பின்வருவது வடமொழிச் சிவஞான போதத்தின் பன்னிரண்டாவது சூத்திரம்:—

முக்த்யை ப்ராப்ய ஸதஸ் தேஷாம்
பஜேத் வேஷம் சிவாலயம்
ஏவம் வித்யாத் சிவஜ்ஞான
போதே சைவார்த்த நிர்ணயம்.

இதன் பொருள் முத்தியின் பொருட்டுச் சத்துக்களை யடைந்து அவர்களுடைய திருவேடத்தையும், சிவாலயத்தையும் பஜிப்பானுக; இவ்வாறு சிவஞானபோதமென்னும் இந்நூலில் சைவார்த்த நிர்ணயத்தை அறிக என்றவாறு. தமிழ்ச் சிவஞான போதத்தில் சிவஞான போதம் என்ற நூற்பெயர் எவ்விடத்திலும் சொல்லப்படவில்லை. ஆனால் வடமொழி நூலில் இப்பெயர் சொல்லியது மட்டுமின்றி அந்தச் சிவஞான போத நூலில் சைவ ஆகமப் பொருளை நிச்சயித்து அறிக" என்று குறிப்பிட்டும் சொல்லப்பட்டுள்ளது. ஆகவே இந்த வடமொழிப் பாடல்தான் வேறொரு மூல நூலைச் சுட்டிக்காட்டி அந்த நூலின் பெயர் சிவஞான போதமென்றும், அதில், சைவார்த்த நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும் அது அறியத் தக்கது என்றும் கூறுவதாக நாம் கருதலாம். ஆகவே

இவ்வடமொழிப்பாடல் (பன்னிரண்டாம் சூத்திரம்) தனக்கு மூலநூலாகிய தமிழ்ச் சிவஞான போதத்தைத் தன் சொல்லாலேயே சுட்டுகிறது என்று கருதுவது பொருத்தமாகும்.

இனி, சுமார் கி. பி. 1325—1350 இல் செய்யப்பட்ட 'ஞான சரிதை' என்ற தொகுப்பினுள் கண்ட ஐந்து சிறு நூல்களுள் ஒன்ருகிய ஞான தீட்சா விதியில் காணும் ஒரு கருத்து இங்குக் கருதத்தக்கது. இச்சிறு நூல் எட்டுத்திரு விருத்தங்களையுடையது. முதல் விருத்தம் 'ஞான குருவருவான்' என்றும், அடுத்த மூன்று விருத்தங்கள், இன்ன நாளில், இன்ன இடத்தில் இன்னவிதமாக அவனை மாணுக்கன் இறைஞ்ச வேண்டுமென்றும் கூறி, அடுத்த விருத்தத்தில் 'இன்ன விதமாகத் திருவடி தீட்சை நிகழ்த்துக' என்றும் கூறப்பட்டுள்ளது. பின்னர் ஏழாவது விருத்தத்தில் மாணுக்கனுடைய மனம், பொருள் நூலில் சேர்ந்திலதேல், 'சிவப்பிரகாசத்தின் உண்மை, செம்மையினிற் செலுத்துக' என்று கூறுகிறது. பின்வருவது இறுதியாகிய எட்டாம் பாடல்:

தேசுமிகும் அருட்பயின்ற சிவப்பிரகா சத்தில்
திருந்துபொதுச் சங்கற்ப நிராகரணந் திருத்தி
ஆசில்அருள் விஞவெண்பாச் சார்பு நூலால்
அருள்எளிதிற் குறிகூட அளித்து ஞான
பூசைதக்க காரணமுன் புகன்றதனிற் புகுந்து
புணர்விக்க சிவஞான போதசித்தி வழிநூல்
மாசில்சத மணிக்கோவை முன்னூல் சான்று
மருவுதிரு முறைத்திரட்டு வைத்தனன்
(மன்னுயிர்க்கே.

இங்குக் கூறுகின்ற பொருளாவது, "பொருள் நூலில்கருத்துச் சேர்ந்திலதேல் அம்மாணுக்கனுக்கு, முதலில் சிவப்பிரகாசத்தின் உண்மை அதிகாரத்தை உபதேசிக்க; அதன் பின்னர் அருள் நிறைந்ததாகிய, சிவப்பிரகாசத்தின் பொது அதிகாரத்தையும், சங்கற்ப நிராகரணத்தையும், திருத்தமாக ஐயங்கள் நீங்கும்படிச் சொல்லி, பின்னர் குற்றமில்லாத திருவருட்பயன், விஞ வெண்பா, ஆகியவற்றை எளிதில் அருள் கூடும்படியாக உரைத்து, ஞானபூஜை அதற்கு உரிய காரணமும் கூறி அந்தப் பூஜையில்மாணுக்

கனுடைய மனத்தை ஒருமைப் படுத்துக; இவ்வாறு செய்தற்கு மன்னுயிர்களுக்கு வைக்கப்பட்ட நூல்கள், சிவஞான போதமும், சிவஞான சித்தியாரும், மாசில் சதமணிக்கோவையும், இவற்றுக் கெல்லாம் முந்திய நூலாகிப் பிரமாணங்கள் நிரம்பியதாகிய (உமாபதி சிவாசாரியார் தொகுத்தருளிய) திருமுறைத் திரட்டும் ஆகும்.

இக்கருத்து நன்கு ஆராய்தற்குரியது. இறைவன் அருளைக் கொண்டு, மாணுக்கருடைய உள்ளத்திலே மெய்ப்பொருள் நூலை இருத்தும் பொருட்டு, அவனுக்கு அமைக்கப்பட்ட நூல்கள் சிவஞான போதம் முதல் நான்குமாம். இவை நான்கும் தமிழ் நூல்கள் என்பதுதெளிவு. தமிழ்ச் சிவஞான போதத்திற்கு முதல் நூலாக வடமொழி நூல் ஒன்று இருந்திருக்குமாஞல் இப்பாடலைச் செய்தவர், "இந்நான்கு நூல்களாலும் அருள் கூடாவிட்டால் வடமொழிச் சிவஞான போதத்தைப் பயன்படுத்திக் கொள்க" என்று கூறியிருப்பார். தமிழினும் பார்க்க வடமொழிக்கு ஏற்றம் கற்பிப்பது அக்காலமரபாக இருந்து வந்திருக்கிறது. அவ்வாறு இங்கு சொல்லப் பெருமையால் இந்தத் தீட்சா விதி செய்தோர் காலத்தில் வடமொழிச் சிவஞான போதம் ஏற்படவில்லை என்பது தெளிவாகிறது. இதனுலும் வடமொழிச் சிவஞான போதம் என்பது இந் நூலின் காலமாகிய (1325—50) கி. பி. 14 ஆம் நூற்ருண்டிற்குப் பிற்பட்டுத் தான் முதல் முதல் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்றும் நாம் கொள்ளலாம். இதனுல் பெறப்படுவது வடமொழிச் சிவஞான போதம், தமிழ் நூலைப் பார்த்துச் செய்யப்பட்டதேயன்றி, அதற்கு முந்திய தன்று என்பதாகும்.

தமிழ் நூல்களுள் முதன் முதலாக சிவப்பிரகாச உரை செய்த மதுரைச் சிவப்பிரகாசர் சிவஞான போதத்தைப் பிரஸ்தாபிக்கிருர். "பூரணகர்த்தாவான ஸ்ரீகண்ட பரமேசுவரன்தான் அருளிச் செய்த முன்னூலாகிய சிவாகமத்தில் ஞானகாண்டமாயிருக்கப்பட்ட பதிபசு பாசத்தின் உண்மையை ஸ்ரீ நந்திதேவதம்பிராஞர்க்குக் கடாக்ஷித்தருள, அந்த உபதேசத்தின் பயனுயிருக்கப்பட்ட சிவஞான போதமாகிய மூலக்கிரந்தம் பன்னிரண்டையும், ஸ்ரீ நந்திதேவ தம்பிராஞர் சநற்குமார பகவான் முதலா

யுள்ள இருடிகளுக்குக் கடாக்ஷித்தருள அந்த சநற் குமார பகவான் சத்தியஞான தரிசினி பரஞ்சோதி மாமுனிகளுக் குக் கடாக்ஷித்தருள, அந்தப்பரஞ்ஜோதி மாமுனிகள், திருவெண்ணெய்நல்லூரே திருப்படைவீடாக உடைய மெய்கண்ட தேவ தம்பிரானுர்க்குக் கடாக்ஷித்தருள அந்த மெய்கண்ட தேவ தம்பிரானுர் அந்தமூலக்கிரந்தம் பன்னிரண்டின் வழியே பன்னிரண்டு சூத்திரமாக வகுத்து, அந்நூற்பெயராலே சிவஞான போதம் என்னும் திருநாமத்தினையும் சாத்தி வழிநூலாகச் செய்தருளித் தமது திருவடியைப் பெற்ற அருணந்தி தேவதம் பிரானுக்குக் கடாக்ஷித்தருள, அவர் அந்நூலை ஆராய்ந்து பார்த்தருளி, அந்நூல் சொற் சுருங்கி, சுத்தம் ஆழ்ந் திருக்கையினுலே அந்நூலின் அத்தத்தை விரித்துச் சிவ ஞான சித்தி என்னும் திருநாமத்தினையும் சாத்தி வழி நூலாகச் செய்தருள, இந்த இரண்டு நூலையும் கொற்ற வன் குடியில் எழுந்தருளிய உமாபதிதேவ தம்பிரானுர் திருவுள்ளத்தின் அடைத்தருளி......"

இது இவர் கூறும் நூல் வழி. இங்கு வடமொழிச் சிவஞான போதம் என்று கூறவில்லை. மூலக்கிரந்தம் என்று மட்டுமே கூறுகிருர். மூலமாகிய உபதேசவாக்கி யம் அல்லது கருத்து என்றே இது கொள்ளத்தகுந்தது. ஆகவே இவர் காலத்தில் வடமொழிச் சிவஞான போதம் இல்லை என்பது தெளிவு. ரௌரவாகமமோ, பாசவிமோ சனப்படலமோ, பேச்சே எழுவதற்கில்லை.

மேலும் இவர், சிவாகமம் முன்னுல் (முதனூல்) சிவஞான போதமும், சிவஞான சித்தியும் வழி நூல், சிவப்பிரகாசம் சார்பு நூல் என்று திருப்பித்திருப்பிக் கூறுகிருர். இது நமக்கும் உடன்பாடே. மெய்கண்டார் செய்தநூல் சிவாகமத்தை நோக்க வழி நூலே அன்றி மற்றப்படி சாத்திர முதல் நூலேயாகும்.

வேதம் பசு; அதன்பால் மெய்யாகமம்; நால்வர்
ஓதும் தமிழ் அதனின் உள்ளுறு நெய்;
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய்மெய்
செய்ததமிழ் நூலின் திறம். — கண்டான்,

என்பது மெய்கண்டார் நூலின் சிறப்புரைக்கும் பழம் பாடல். இதன் காலம் தெரியவில்லை. வேதம், ஆகமம்

நால்வர் ஓதும் தமிழ், மெய்கண்டான் செய்த தமிழ் நூல் என்பது இது வைத்துள்ள முறை. ஆகமத்துக்குப்பின் எந்த வடமொழி நூலுக்கும் இடையில் இடம் இல்லாத படியுள்ளது. சிவாகமம் முதனூல், மெய்கண்டாரின் சிவ ஞானபோதம் வழிநூல் என்ற கருத்துக்கு இது பொருந்துவதாகவே அமைந்துள்ளது. எனவே இப்பாடல் தோன்றிய காலத்திலும், மதுரைச் சிவப்பிரகாசர் தம் சிவப்பிரகாசப் பேருரை எழுதிய காலத்திலும் வட மொழிச் சிவஞான போதம் இல்லை.

முதன் முதலாக வடமொழிச் சிவஞான போதம் என்று குறிப்பிடுபவர் சூரியனூர் கோயிலா தீனத்தை ஸ்தாபித்த ஸ்ரீ சிவாக்கிர யோகிகள். வடமொழியில் மகா பண்டிதராகிய அவர் வடமொழிச் சிவஞான போதத்திற்கு வடமொழியில் 12 ஆயிரம் கிரந்தமாக சிவாக்கிர பாடியம் என்ற பெரிய பாடியம் செய்தார். வேறு பாடுகள் சில இருப்பினும், இவ்வுரை சைவ சித்தாந்தக் கருவூலமாக இன்னும் விளங்குவது; இது சிவஞான சுவாமிகளுக்குப் பெருந்துணையாக இருந்தது.

எனவே, இங்குக் கூறியவற்றால் வடமொழிச் சிவஞான போதத்துக்குக் காலமுறைப்படி மேல் எல்லையையும், கீழ் எல்லையையும், நாம் காண்கிறோம். மேல் எல்லை மதுரைச் சிவப்பிரகாசர்; அவர் உரை செய்த காலம் கி. பி. 1488 அப்போது வடமொழிச் சிவஞான போதம் இல்லை. கீழ் எல்லை சிவாக்கிரயோகிகள். அவர்காலம் கி பி. 1564 இப் போது வடமொழிச் சிவஞானபோதம் ஏற்பட்டு விட்டது. ஆகவே இவ் வடமொழிநூல் ஏற்பட்ட காலம் கி. பி. 1488—1564 ஆகிய எல்லைக்குள் அமைந்திருக்கிறது என்று முடிவு செய்தல் பொருந்துவதாகும். சிவாக்கிர யோகிகளே மெய்கண்டாரிடமுள்ள பக்திப் பெருக்கால் அவர் திருவாக்குக்கு ஆதரவாக வடமொழியில் நூல் செய்து வைத்து அதற்கு ஆகமப் பிரமாணமும் காட்டினார் என்று பெரியோர் சொல்வார்கள். இது மெய்யாயினும் கூட, முற்காட்டிய காலவரையறை பழுதாகாது.

எங்ஙனமாயினும் வடமொழிச் சிவஞானபோதம் எழுதிச் சேர்க்கப் பெற்ற காலம் கி. பி. 1488க்கும், 1564க்கும் இடைப்பட்டதாகும் என்பது தெளிவு.

# திருவான்மியூரில் அந்தர் யோகம்

[கொ. நீ. சிங்காரவேலு]

"அந்தர் யோகம்" அல்லது "உண்முக நோக்கு" என்னும் சொற்றொடருக்குப் புறஉலகில் அலைந்து திரியும் மனத்தை ஒருமுகப்படுத்தி உள்ளே செலுத்தி ஆண்டவன் பால் அழுந்தச் செய்தல் எனப் பொருள் கொள்ளலாம்.

இதுவரை நமது சமாஜச் சார்பில் மூன்று அந்தர் யோகங்கள் நடைபெற்றன. முதல் யோகம் 8—3—64-ல் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் நடைபெற்றது. உயர்திரு வா. தி. மாசிலாமணியார் அவர்கள் அதற்குரிய செலவுகளை ஏற்றுக் கொண்டார். இரண்டாம் யோகம் 11—4—64, 12—4—64 இரு நாட்களிலும் திருவான்மியூரில் நடந்தேறியது. மூன்றும் யோகம் பழனியம்பதியில் உயர்திரு. அ. சேனுபதி, எம். எல். ஏ, அவர்கள் பொருட் செலவில் 24—4—64-ல் நடைபெற்றது. இந்த மூன்று யோகங்களும் சைவப் பெரியார் மலேயா உயர்திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றன. அவற்றுள் இரண்டாவதாகத் திருவான்மியூரில் நடைபெற்ற அந்தர் யோகத்தைப் பற்றியும் அதன் பயனைப் பற்றியும் விளக்குவது இக்கட்டுரை.

திருவான்மியூரில் பாம்பன் சாமிகள் அறச் சாலையில் அந்தர் யோகம் நடத்துவதென் ஏற்பாடாயிருந்தது. 10—4—64 இரவு 7 மணிக்கெல்லாம் சென்னையிலிருந்தும் அதன் சுற்றுப்புற ஊர்களிலிருந்தும் இருபத்தைந்து அன்பர்களுக்கு மேல் பாம்பன் சாமிகள் அறச்சாலையை வந்தடைந்தனர். அடுத்த இரு நாட்களிலும் சுமார் இருபதுக்கு மேற்பட்ட அன்பர்கள் வந்து கலந்து கொண்டனர்.

திருவான்மியூர் சென்னை நகரத்திற்கு மிக அண்மையில் இருந்தும் கிராமத்திற்குரிய இலக்கணங்கள் அமைந்திருந்தது. பாடல்பெற்ற பெரியதோர் திருக்கோயில்; கோயிலின் எதிரில் குளம், குளத்தைச் சுற்றி வீடுகளும் சத்திரங்களும் இவற்றோடு ஓரிரு தெருக்களைக் கொண்டது தான் திருவான்மியூர். குளத்தின் வடகிழக்குக் கோடியிலிருந்து வடக்கு நோக்கிச்சென்றால் $1\frac{1}{2}$ பர்லாங் தொலைவில் அந்தர்யோகத்திற்குத் தேர்ந்தெடுத்த பாம்பன் ஸ்ரீமத்குமர குருதாச சுவாமிகள் சமாதிக் கூடமும், அறச்சாலையும்

காணலாம். இந்த இடம் அந்தர் யோகத்திற்கு மிகவும் பொருத்தமான இடம். எங்கும் மணற்பரப்பு. கிழக்கே கடல் அமைதியாகக் காட்சி அளிக்கிறது. அதன் கொந்தளிப்பும் ஓசையும் கேட்காத தொலைவில், அதன் அழகிய காட்சியும் குளிர்ந்த காற்றும் நுகர்தற்குரிய அண்மையில் அந்த இடம் அமைந்திருக்கிறது.

இரவு 8 மணிக்குச்சிற்றுண்டி அருந்தி 8–40 மணிக்கு அறச்சாலையின் முன்னுள்ள மணற்பரப்பில் அமர்ந்தோம் முன்னரே நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டவண்ணம் 8–40 மணியிலிருந்து 10 மணி வரை சந்தேகம் தெளிதல் என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. பெண்கள் ஒரு புறமும் ஆண்கள் மற்றொரு புறமும் தலைவர் இடையிலுமாக அமர்ந்தோம். பல கேள்விகள் கேட்கப்பட்டன. தலைவர் தானே முதலில் விடையிறுக்காமல், மற்றவர்களை விடையிறுக்கச்சொல்லிப் பின் தன் முடிவைக் கூறினார்.

இரவு 10மணிக்கு "தென்னாடுடைய சிவனேபோற்றி" என்ற முழக்கத்துடன் உறங்கச் சென்றோம். மறுநாள் காலை 4–30 மணிக்குத் திருப்பள்ளியெழுச்சியுடன் எழுந்து காலைக் கடன்களை முடித்து, சரியாக 5–30 மணிக்குக் கூட்டுப் பிரார்த்தனைக்கு திரு. பாம்பன் சுவாமிகளின் சமாதியை யடுத்த கூடத்தில் அமர்ந்தோம். கூட்டு வழிபாட்டின் முறை பின்வருமாறு: முதலில் 5 நிமிடம் தியானம். பின் 5 நிமிடம் நாமாவளி, பின் தேர்ந்தெடுத்த திருமுறைப் பாடல்களில் வரிசை பாடுதல், ஒருவர் பாட மற்றவர்கள் திருப்பிச் சொல்லுதல் என்ற முறையில் பாடுதல். ,பின் சிவபுராணம் ஓதுதல், பின் பொதுப்பாடல்களைச் சேர்ந்து பாடுதல், பின் குறளில் ஒரு அதிகாரம் உரையுடன் ஒருவர் சொல்ல மற்றவர்கள் சேர்ந்து சொல்லுதல்,பின் வாழ்த்துப்பாக்கள் வரிசைபாடுதல். ஆகிய இம்முறையில் கூட்டுவழிபாடு நடத்துதல் தலைவர் அவர்களால் மலேயாவில் பல இடங்களில் பரப்பப்பெற்று, இந்தியாவிலும் அவர் தங்கும் இடங்களிலெல்லாம் பயிலப் பெற்று வருகின்றது.

பின், காலைக் கடமைகள், சிற்றுண்டி, முதலிய முடித்துக்கொண்டு 8–15 மணிக்குக் கூடினோம். 8–15 முதல் 8–25 வரை நாம பஜனை. மனம் ஒரு வழிப்பட்டு அமைதி

யுற இறைவன் நாமத்தை திருப்பித் திருப்பிச் சொல்வது இன்றியமையாதது. இறைவன் நாமத்தைச் சொல்லும் போது "காதலாகிக் கசிந்து" சொல்வது மிகவும் முக்கியம் என்று தலைவர் வற்புறுத்தினார். உள்ளம் ஈடுபடாமல் வெறும் உதடுகள் அசைவதில் பயனில்லை என்றும் சொன்னார்.

பின், 8–25 முதல் 8–45 வரை தியானம். தியானம் ஆரம்பிக்கு முன் அதைப்பற்றித் தலைவர் சில கருத்துக்களைச் சொன்னார். தியானம் என்பது சிதறிச் செல்லும் எண்ணங்களை ஒருமுகப்படுத்தி ஓரிடத்தில் நிலைக்கச் செய்வதாகும். சிவானந்த லஹரியில் ஒரு பாட்டில் சங்கரர் கூறுகிறார்:— "என்னிடத்தில் ஒரு குரங்கு இருக்கிறது. எப்போதும் தாவிக் குதித்து எனக்குத் தொல்லை விளைக்கிறது. ஏ, கபாலியே! அதை உனக்குத் தந்துவிடுகிறேன். அதை எடுத்துக் கொண்டால் எனக்கும் சுகம். உனக்கும் சுகம்" என்று மனக் குரங்கை இறைவனிடத்து ஒப்புவித்தால் நமக்கு மன அமைதி ஏற்படும், என்பதைச் சங்கரர் குறிப்பிடுகிறார். மனத்தை அடக்கினவன் மிகுந்த பலவானாகின்றான். ஒரு பெரியவர் தனக்கு இரண சிகிச்சை நடத்தும்போது தன் மனத்தை அப்புறப்படுத்திவிட்டார். பின் அவர் கத்தி சிகிச்சையினால் ஒருவித துன்பமும் உறவில்லை. தியானம் பழகும்போது முதலில் பலவித எண்ணங்கள் தோன்றுவது இயற்கை. ஆனால் அவை பழகப் பழக மறைந்துவிடும். தியானத்திற்கு இஷ்டமூர்த்தி மிக அவசியம். ஒரே கோலத்திலிருக்கும் ஒரே மூர்த்தியிடம் நினைவை நிலைத்திருக்கச் செய்ய வேண்டும். அம்மூர்த்திக்கு அழகு, கருணை, ஜோதி முதலிய பண்புகளை ஏற்றிப் பாவிக்கவேண்டும். காலை நேரம் தியானத்திற்குத் தகுந்த நேரம். ஒத்த மனமுடையவர்கள் சேர்ந்து அமர்ந்து தியானம் செய்தல் நல்லது. துறவிகள் வாழும் இடம் தியானத்திற்கு நல்ல இடம். இவ்வாறு தியானத்தைப் பற்றித் தலைவர் பல கருத்துக்களைச் சொன்னபின் தியானத்தில் அமர்ந்தோம்.

பின் 8–45 முதல் 9–45 வரை வகுப்பு. இந்த நேரத்தில் தலைவர் அந்தர் யோகத்தைப் பற்றியும் சமய வாழ்க்

கையைப் பற்றியும் பல கருத்துக்களைச் சொன்னார். அவைகளில் சில பின்வருமாறு:—

நாம் உபாசிக்கும் மூர்த்தி ஒன்றாயிருக்க வேண்டும்; மந்திரம் ஒன்றாகயிருக்க வேண்டும்; அப்போதுதான் உபாசனையால் தக்க பலனடைய முடியும். அதுபோலவே நியமம் அல்லது தொண்டு ஒன்றாகயிருக்க வேண்டும். பெரிய புராணத்தில் வரும் பெரியார்களெல்லாரும் ஒரே தொண்டைச்செய்தார்கள். அடியார்களுக்குஓடு கொடுத்த வர், அது தவிர வேறு தொண்டு செய்ததாகத் தெரிய வில்லை. அதுபோலவே கௌபீனம் கொடுத்தவரும். இல் (மனைவி) ஒன்றாகயிருக்க வேண்டும். சொல் ஒன்றாக இருக்க வேண்டும். இராமபிரா னுக்கு இல் ஒன்று, சொல் ஒன்று, வில் ஒன்று என்று கூறுவார்கள். அதுபோல நாம் ஆழ்ந்து படிக்கும் நூலும் ஒன்றாகயிருக்க வேண்டும். நாம் சேர்ந்து உழைக்கும் சங் கமும் ஒன்றாகயிருக்க வேண்டும். இப்படி ஒன்றிலேயே நம் நினைப்பும், சொல்லும், செயலும் ஆழ்ந்திருக்குமாயின் நம் வாழ்க்கை செறிவுடையதாக, குறிக்கோளுடையதாக இருக்கும். திருக்குறளைச் சரிபாதியாகப் பிரித்தால் நடுவில் இருக்கும் குறள் பின்வருமாறு:—

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியராகப் பெறின்"

இதன் உண்மையை அறிந்து நடந்தால் நாம் சாதிக்க முடி யாத காரியமில்லை.

கீழ்ப்படிதல் ஒரு நல்ல குணம். படியாத சீடனுக் குப் பாடம் வராது. படிப்பைக் காட்டிலும் படிவது முக்கியம்.

இவ்வாறு தலைவர் காலையிலும் பிற்பகலிலும் 'வகுப்பு' என்ற நிகழ்ச்சிக்கு ஒதுக்கிய நேரத்தில் பல அரிய கருத் துக்களைக் கூறினார்.

பின் 9-45 முதல் 10-45 வரை 'சொற்பொழிவு'. இந்த நேரத்தில் தலைவர் ஒவ்வொருவரையும் தங்கள் வாழ்க்கை வரலாற்றைக் கூறச்சொன்னார். தங்கள் வாழ்க்கையில் சோகச் சம்பவம் நடந்தால்கூட உணர்ச்சியின்றி வேற்று மனிதரின் சரித்திரத்தைச் சொல்வது போலச் சொல்ல வேண்டும் என்று கூறினார். தன்னையே பற்றற்றுப் பாரி

சிலிப்பதற்கு இது தகுந்த சாதனம். இவ்வளவு சொல்லியும் ஒரு அம்மை தம் பெண்ணுக்குக் குழந்தையில்லைஎன்று தெரிவிக்கும்போது தேம்பி அழுதுவிட்டார்.

பின் 10.45 முதல் 11.45 வரை மௌனம். இந்த நேரத்தில் யாவரும் பேசுவது தவிர என்ன வேண்டுமானுலும் செய்யலாம். இது நாவடக்கத்திற்கு நல்ல பழக்கம். "மனிதனுடைய சக்தி இரண்டு வகையில் விரயமாகிறது. ஒன்று இணைவிழைச்சு; மற்றொன்று பேசுதல்; என்று தலைவர் சொன்னார்.

பின் 11.45 முதல் 12.45 வரை கூட்டு வழிபாடு. இந்த நேரத்துல் ஒவ்வொருவருக்கும் இறைவனைப் பாட வாய்ப்புண்டு. இடையிடையே எல்லோரும் சேர்ந்து பாடுவதும் உண்டு.

உணவும் ஓய்வும் ஆன பின் பிற்பகல் 2-45-க்கு நாம பஜனையோடு அந்தர் யோகம் ஆரம்பமாயிற்று. தியானம், வகுப்பு, வாசித்தல் முதலிய நிகழ்ச்சிகள் முறையே நிகழ்ந்தன. பின் 'மவுனம்' என்பதற்கு ஒதுக்கிவைத்த நேரத்தில் தலைவர் இரண்டு பாக்களை வரி வரியாகச் சொல்லி எங்களைச் சொல்லச் செய்தார். இரண்டு மூன்று தரம் சொன்ன பின் ஞாபக சக்தியைச் சோதிப்பதற்கு பலரைத் திருப்பிச் சொல்லச் செய்தார். அப்பாக்கள் மிக அழகியதாக இருப்பதால் அவைகளைக் கீழே தந்திருக்கிறேன்:—

" ஆம்போதும் வேல் மயிலும் துணை; ஆகாமலே ஆகங்கள்
போம்போதும் வேல் மயிலுந் துணை; பொறி நுட்பம்
நெறி தப்பியே
சாம்போதும் வேல் மயிலுந் துணை; சடம் வீழ்ந்தபின்
பிடிசாம்பராய்
வேம்போதும் வேல் மயிலுந் துணை; வேலாயுதா! வேலாயுதா

" ஆசை அறாய் பாசம் விடாய், ஆன சிவபூஜை பண்ணாய்,
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய்—சீசீ
சினமே தவிராய், திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்'"

பின் திருவான்மியூரிலுள்ள புகழ்பெற்ற சிவத்தலத்தைத் தரிசித்து வந்தோம். இரவு உணவு அருந்திய பின் முன்னாள் போலவே 'சந்தேகந் தெளிதல்' என்ற நிகழ்ச்சி நடந்தது.

மறுநாள் 12—4—64 இது போலவே நிகழ்ச்சிகள் நடந்து, மாலை 5-மணிக்குப் பாம்பன் குமரகுருதாச சுவாமிகளின் சமாதியின் முன்பு 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்ற முழக்கத்துடன் கூட்டம் கலைந்தது. விட்டு நீங்க மனமில்லாமல் வீடு திரும்பினோம்.

சமய வாழ்க்கையில் நிலையாக நம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு அந்தர் யோகம் ஒரு சிறந்த சாதனமாகும். குழந்தை உள்ளத்தோடும், ஒத்த உணர்வோடும் குறைந்தது இரண்டு நாளைக்காவது தொண்டர்களோடு உடனுறைந்து காலை முதல் இரவு வரை புற உலகத்தை மறந்து இறை அருளிலேயே பலவகையாக எண்ணத்தைச் செலுத்தி ஆன்ம லாபத்தை அடைவதுதான் அந்தர்யோகம். அந்தர்யோகத்தில் நம்முடைய அறிவு, உணர்ச்சி, வைராக்கியம் ஆகிய மூன்று ஆற்றல்களுக்கும் வேலையுண்டு. இதுபோன்ற அந்தர் யோகங்கள் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நடப்பது ஆன்மீக வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும்;

---

திருத்துறையூர் திரு. ஆறுமுக நயினர் அவர்கள் தாம் உறுதி கூறிய படி 10 உறுப்பினர்களைச் சேர்த்துத் தந்துள்ளார்கள்.

---

## திருவள்ளுவர் திருநாள் விழா

### பரிசுப் போட்டிகள்

வருகிற வைகாசித் திங்களில், உலகப் பொதுமறையாம் திருக்குறளை நமக்கருளிய தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருநாள் விழாவைக் கொண்டாடச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் முடிவு செய்துள்ளது. அதையொட்டிக் கட்டுரைப் போட்டியும் புத்துரை விளக்கப் போட்டியும் நடைபெறும். கட்டுரைப் போட்டிக்கு முறையே ரூ. 100, 75, 50 பரிசு வழங்கப்பெறும். புத்துரை விளக்கப் போட்டிக்குக் குறள் ஒன்றுக்கு ரூ. 10 வீதம்பரிசளிக்கப்பெறும். போட்டிக்குரிய தலைப்புகளையும் மற்ற விபரங்களையும், 'செயலாளர், திருவள்ளுவர் திருநாள் விழா' 1/140 பிராட்வே, சென்னை-1. என்ற முகவரிக்கு எழுதிப் பெறவும்.

திருநாவுக்கரசு வித்தியாசாலை 38ஆவது ஆண்டுவிழா 6—5—64ஆம் நாளிலும் சிறப்புற நிகழ்ந்தன.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத் திருக்குறள் விரிவுரைத் தொடக்கவிழா 13—4—64ல் பூக்கடை சென்ன மல்லீசுவரர் அனுபூதி மண்டபத்தில் தமிழக முதலமைச்சரால் தொடங்கிவைக்கப் பெற்றது. ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலை 6மேணி முதல் 8 வரை விரிவுரைகள் தொடர்ந்து நடைபெறும்.

திருவதிகை அப்பர் இல்லத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவவதாரத் திருநாள் விழா 13—4—64ல் திரு. A. உத்தண்டராம பிள்ளை அவர்கள் தலைமையில் சிறப்புற நிகழ்ந்தது.

---

## பழநியில் அந்தர் யோகம்-3

நம் சமாஜத்தின் சார்பில், 23, 24—4—64 தேதிகளில் திரு. A. சேனுபதி கவுண்டர், எம். எல். ஏ., அவர்கள் ஆதரவில் பழநி பட்டக்காரர் நிலையத்தில் அந்தர்யோகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பல ஊர்களிலிருந்தும் நூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட அன்பர்கள் வந்து நிகழ்ச்சியில் கலந்து பயன் பெற்றனர். திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் அந்தர் யோகத்தை நடத்திவைத்தனர். வந்திருந்த அன்பர்கள் அனைவர்க்கும் தங்குவதற்கான வசதியும் உணவும் திரு. A. சேனுபதி கவுண்டர் அவர்கள் சிறந்த முறையில் ஏற்பாடு செய்ததுமல்லாமல் இருநாட்களிலும் அவர் தமது குடும்பத்தினருடன் உடனிருந்தது மிகவும் பாராட்டற்குரியது. அவரது செயலாளர் திரு. பரஞ்சோதி அவர்கள் தக்கமுன் ஏற்பாடுகள் முற்றும் செய்து உதவினர். சமாஜத்தின் சார்பில் தலைவர் திரு. G. M. முத்துசாமி பிள்ளையவர்களும், துணைச்செயலர் திரு. மு. நாராயணசாமி அவர்களும் வந்திருந்தனர். பழநி தேவஸ்தான நிர்வாக அலுவலர் திரு. இராமையாநாயுடு அவர்களும் நகராட்சி ஆணையாளர் திரு. குருசாமி யவர்களும் வருகை தந்து பயன் பெற்றனர். பழநி தேவார பாடசாலை ஓதுவார் மு. கல்யாணசுந்தர தேசிகரும் அவரது மாணவர்களும் முதல்நாள் மலை வழிபாட்டின் போதும், இரண்டாம் நாள் கிரிவலம் வரும் போதும் சிவ புராணம், கந்தர் அநுபூதி கந்தர்கலிவெண்பா முதலிய பல பாடல்களைப் பாராயணம் செய்து வந்தனர். அந்தர் யோக நிகழ்ச்சியின்போது,

சமாஜத் தலைவரால் கொடுக்கப்பெற்ற "சிவலிங்க வழிபாட்டின்" 25 பிரதிகளை, திரு. A. சேனாபதி கவுண்டர் அவர்கள் குறிப்பிட்ட அன்பர்கட்கு இலவசமாக வழங்கியதோடல்லாமல், அங்கு வந்திருந்த அன்பர்களை எல்லாம் சமாஜ உறுப்பினர்களாகப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்கள். தாமும் ஆயுள் உறுப்பினராகச் சேர்ந்தார்கள். இதைக்கேட்ட சிலர் உறுப்பினர்களாகச் சேர்ந்தார்கள்; இன்னும் பலர் உறுப்பினராவதாக வாக்குறுதியளித்துள்ளார்கள்.

அந்தர்யோக முடிவில் திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் தியானம், இறை வழிபாடு, மந்திரம் ஆகிய இம் மூன்றும் மக்கள் என்றும் கடைப்பிடிக்க வேண்டியவை என்றும், இதனால் பல நன்மைகள் விளையும் என்றும் வலியுறுத்திக் கூறினார்கள் அவரது உபதேச மொழிகளை அன்பர்கள் எல்லாரும் ஆர்வத்துடன் ஏற்றுக் கொண்டனர்.

அந்தர்யோகத்தின் பயனை அனுபவித்த திரு. கவுண்டர் அவர்கள், அடுத்த ஆண்டும் தமது சொந்தச் செலவில், சமாஜச் சார்பில், பழநிக்கு அருகில் உள்ளதும் இயற்கை வசதிகள் அமைந்துள்ளதுமான ஆவுடையார் கோயிலில் அந்தர்யோகம் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகக் கூறியுள்ளார்கள்.

சமாஜத்தின் சார்பாகத் தலைவர் அவர்கள், எல்லோருக்கும் நன்றி தெரிவிக்கும் முறையில் குறிப்பாகக் கடல் கடந்து வந்து தெய்வத் தொண்டாற்றி வரும் திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கட்கு நன்றியறிதலைத் தெரிவித்தார்கள். அன்பர் எல்லோரையும் வரவழைத்துத் தமது சொந்தச் செலவில் உபசரித்த திரு. கவுண்டர் அவர்கட்கும் நன்றியைத் தெரிவித்ததுடன் அவரும் அவரது குடும்பத்தினரும் நல்வாழ்வு பெற அன்பர்கள் சார்பில் இறைவனை வேண்டிக் கொண்டனர். —மு. நாராயணசாமி.

---

Printed at the Sengunthamithran Press, 33, Armenian St., Madras-1, by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai B.A., L.T., for the Saiva Siddantha MahaSamajam 12, East Mada St., Mylapore, Madras-4.